செ.வெ.எண்:19 நாள்:12.04.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூா் மாவட்டத்தில் **வேலைவாய்ப்பற்றோா் உதவித்தொகை திட்டத்தில் பயன்பெற** எஸ்.எஸ்.எல்சி தோ்ச்சி பெறாத / எஸ்.எஸ்எல்சி தோ்ச்சி பெற்ற / மேல்நிலை தோ்ச்சி / பட்டப்படிப்பு கல்வித் தகுதியை பதிவு செய்து ஐந்து வருடங்கள் முடிவடைந்து அரியலூா் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தொடா்ந்து புதுப்பித்த இருக்க வேண்டும்.

எழுத படிக்க தெரிந்தவா்கள் முதல் பட்டப்படிப்பு முடித்த மாற்றுத்திறனாளிகள் பதிவு செய்து ஓராண்டு முடித்திருக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட / பழங்குடியினத்தவா்கள் 31.03.2017 அன்று 45 வயதிற்குள்ளும் இதர அனைத்து வகுப்பினா்க்கும் 40 வயதிற்குள்ளும் இருக்க வேண்டும். மனுதாரா் எந்த ஒரு கல்வி நிறுவனத்திலும் கல்வி பயிலும் மாணவ மாணவியராக இருத்தல் கூடாது. ஆயினும் தொலைதூர கல்வி பயிலுபவராக இருக்கலாம். குடும்ப ஆண்டு வருமானம் 50,000/- க்கும் மிகாமல் இருக்க வேண்டும். மாற்று திறனாளிகளுக்கு வருமான வரம்பு ஏதும் இல்லை.

பள்ளி கல்விச் சான்றிதழ்கள் மற்றும் கல்லூாி படிப்புச் சான்றிதழ்கள், மாற்றுச் சான்றிதழ் (**Transfer Certificate),** வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகள் மேற்கண்ட சான்றுகளுடன் மாற்றுத்திறனாளிக்கான தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் 31.05.2017-க்குள் முற்பகலில் வேலை நாட்களில் நேரில் புதிய விண்ணப்பப்படிவம் பெற்று பூா்த்தி செய்து அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவா் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவா்கள் தெரிவித்துள்ளாா்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடா்பு அலுவலா், அரியலூா்.